*7*

# திருமணத்தைக் குறித்த தேவனுடைய போதனை தேவைப்பட்ட சபை

## [1 கொரிந்தியர் 7:1–40]

*கொரிந்து சபையார் குழப்பமான கேள்விகளைக் கேட்டு பவுலுக்கு எழுதியிருந்தனர். "நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக் குறித்து ..." (7:1) என்று பவுல் குறிப்பிட்டார்; இதே போன்ற பதங்களை நிருபத்தின் மற்ற கேள்விகளுக்கும் பதில் கொடுக்கும் முன்னுரையாக பயன்படுத்துகிறார்.[1]*

*அதிகாரம் 7ல் வசனப் பகுதியில் குறிப்பாக எழுதப்படாத இக் கேள்விகளுக்கு பதிலளிக்கத் துவங்குகிறார். கொரிந்து சகோதரர்கள் "அப்பொழுதிருந்த துன்பத்தின்" வெளிச்சத்திலே பிரச்சனைகளைச் சந்தித்தார்கள் (7:26).[2] ஒரு கிறிஸ்தவன் விவாகம் (திருமணம்) பண்ணவேண்டுமா கூடாதா என்பதற்கு பவுலின் வழிநடத்துதல் அவர்களுக்குத் தேவைப்பட்டது. அவர்களில் ஒருவர் கிறிஸ்தவராக இருந்து, மற்றவர் கிறிஸ்தவரல்லாதிருந்தால் அந்தத் தம்பதி என்ன செய்ய வேண்டும் என்பதிலே அவர்களுக்குக் குழப்பமிருந்தது.*

## "பொதுவாக கிறிஸ்தவர்களுக்கு திருமணத்தைக் குறித்த விவரம் என்ன?" *(7:1-11)*

**"ஒழுங்கீனத்தைத் தவிர்க்க, திருமணம் செய்" *(7:1-9)***

*திருமணம் ஒழுங்கீனத்தை தவிர்க்க முடியும் எனும் கருத்தை பவுல் முதலாவதாக வைக்கிறார் (7:1-9). அப்போஸ்தலன் ஒரு பொதுவான வழிகாட்டலை முன் நிறுத்துகிறார்: "ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது" (7:1). ஒரு மனிதன் பெண்ணிடம் நெருக்கமான உறவு வைத்துக் கொள்ளாமலிருந்தால் அவன் நல்லதை செய்வான்; இன்னொரு வார்த்தையில் சொன்னால், திருமணம் செய்யாமலிருப்பது ஒரு மனிதனின் நல்ல கருத்து.[3] எப்படியாயினும், வேசித்தனம் இராதபடிக்கு "அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவளாயிருக்க வேண்டும்." என்று பவுல் கூடுதலாகக் குறிப்பிட்டார் (7:2). எனவே, திருமணம் செய்ய வேண்டிய காரணங்களில் ஒன்று, ஒழுங்கீனத்தை தவிர்ப்பதற்காக.[4]*

*மேலும் புருஷன்,மனைவி இருவருமே தங்களின் துணைக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும் என்றும் பவுல் சொன்னார் (7:3). அதாவது ஒவ்வொருவரும் தனது துணையின் பாலுணர்வு ஆசைகளை திருப்தி*

செய்தலைத் தேட வேண்டும். அவனோ அவளோ தன் சொந்த சரீரத்துக்கு அதிகாரியல்ல என்பதையும், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஒப்புக் கொண்டு, பக்தி சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக சில காலம் பிரிந்திருந்தாலொழிய, தனது துணையின் பாலுணர்வு உரிமையை புறக்கணிக்கக் கூடாது (7:4, 5).

கொரிந்துவிலிருந்த சில அங்கத்தினர்கள், தங்களைச் சுற்றிலுமிருந்தவர்களின் மூர்க்கத் தனமான பாலுணர்வு ஒழுங்கீனங்களால் மனப்பாதிப்படைந்து, கிறிஸ்தவர்கள் திருமணம் பண்ணினாலும் பாலுணர்வுக் காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது என்று தீர்மானித்திருந்தனர்.[5] இந்தக் காரியத்துக்காக தேவன் கொடுத்த நிவாரணம், "ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாதபடியால் சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்" (7:5).

பவுல் தொடர்ந்து,

> விவாகமில்லாதவர்களையும் கைம் பெண்களையும் குறித்து நான் சொல்லுகிறது என்னவென்றால், அவர்கள் என்னைப் போல் இருந்து விட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும் ஆகிலும் அவர்கள் விரத்தராயிருக்கக் கூடாதிருந்தால் விவாகம்பண்ணக்கடவர்கள்; வேகிறதைப்பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நல்லது (7:8, 9).

என்று சொன்னார். கொரிந்தியர்கள் விவாகம் பண்ணாமலிருப்பது நலமென்றாலும், அவர்கள் விவாகம் பண்ணினாலும் தவறல்ல. இந்த வழி காட்டல்கள் "விவாகமில்லாதவர்களுக்கும்" "விதவைகளுக்கும்" சொல்லுகிறார் (7:8). திருமணம் செய்யாமலேயே வாழ்கிற வரம் எல்லோருக்கும் இருப்பதில்லை (7:7). ஆதலால், விரத்தராய் (பரிசுத்தமுள்ளவராய்) இருக்கக் கூடாதென்றால், "விவாகம் பண்ணக்கடவர்கள்; வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்" (7:9).[6]

### "நீங்கள் விவாகம் பண்ணிக் கொண்டிருந்தால், விவாகம் பண்ணினவர்களாகவே தரித்திருங்கள். விவாகரத்து செய்யாதிருங்கள்" (7:10, 11)

பிறகு கிறிஸ்தவத் தம்பதிக்கு தான் கொடுத்தக் கட்டளை தன்னுடையதல்ல கர்த்தருடையது என்று போதித்தார் (7:10).[7] ஒரு வேளை ஒரு மனைவி தன் கணவனை விட்டுப் பிரிந்து போனால், அவள் "விவாகமில்லாதிருக்கக்கடவள் அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்" (7:11). பவுல் இயேசு கிறிஸ்துவின் போதனையை அப்படியே பிரதிபலித்து, இங்கே பேசுகிறார். புருஷனும் மனைவியும் விவாகரத்து (தள்ளி விடுதலை) செய்வது தேவனுடைய உத்தேசமல்ல என்று இயேசு கூறியிருந்தார் (மத்தேயு 19:4-6).

### "தம்பதிகளில் ஒருவர் விசுவாசமுள்ளவராயிருந்து மற்றவர் விசுவாசமில்லாதிருந்தால் திருமண பந்தம் முறியலாமா?" (7:12-24)

மனைவியானவள் தனது புருஷனை விட்டுப் போகக் கூடாதென்றும் புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடக் கூடாதென்றும், சொன்ன பிறகு பவுல் ஒரு விசேஷித்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்: அவிசுவாசியான ஒருவருடன்

*ஒரு கிறிஸ்தவன் விவாகம் செய்திருப்பது பற்றி என்ன?*

*கிறிஸ்தவன் கிறிஸ்தவரல்லாதவருடன் தொடர்ந்து வாழும்படி எதிர் பார்க்கப்படுகிறானா? எஸ்றாவும், நெகேமியாவும் - யூதர்கள் தங்களின் அந்நிய ஜாதியான மனைவிகளை தள்ளிவிடச் சொல்லி - அவர்களுடைய அவிசுவாசமுள்ள துணையிடமிருந்து விலகும்படி எதிர்பார்க்கப் பட்டதைக் குறித்து கொரிந்தியர்கள் ஆச்சரியப்பட்டிருக்கலாம் (எஸ்றா 10:10-12; நெகேமியா 13:23-30).*

### *"நீங்கள் கிறிஸ்தவராயிருப்பின் அவிசுவாசமுள்ள துணையுடன் திருமண பந்தத்திலேயே நிலைத்திருங்கள்" (7:12-16)*

*பவுல் கேட்கப் பட்ட கேள்விக்கு பதில் அளித்து ஒரு சாராம்ஸமாக, "உங்கள் அவிசுவாசமுள்ள துணையை விவாகரத்துச் செய்ய வேண்டாம்" (7:12, 13)[8] என்றார். ஏன்? ஒரு வகையில், அவிசுவாசியுடனான விசுவாசியின் விவாகம் அவிசுவாசியை பரிசுத்தமாக்குகிறது (7:14).[9] மேற்கொண்டு, அவிசுவாசமுள்ள துணையுடன் ஒரு கிறிஸ்தவன் திருமண பந்தத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தால், அவர் (அவிசுவாசமுள்ள) அவனையோ அவளையோ கிறிஸ்துவிடம் வழி நடத்த ஏதுவாகலாம் (7:16).*

*எப்படியிருப்பினும், இந்த கருத்துடன் கூட்டி: "உங்கள் அவிசுவாசமுள்ள வாழ்க்கைத் துணை உங்களை விட்டு பிரிவதென்று முடிவு செய்தால்," அவனையோ அவளையோ உங்களோடு தொடர்ந்து வாழும்படி வலியுறுத்த வேண்டாம். கிறிஸ்தவன் "இப்படிப்பட்ட விஷயத்தில் அடிமைப்பட்டவனல்ல" என்று பவுல் சொன்னார் (7:15). விவாகம் செய்து கொள்ள விருப்பமில்லாதவருடன் விவாகம் செய்யும்படி யாரையும் வற்புறுத்த தேவன் எதிர் பார்ப்பதில்லை.[10] கார்ல் ஹொல்லாடே தெளிவான நிவாரணத்தை இந்தப் பிரச்சனைக்கு முன்பாக வைக்கிறார்:*

> *சில விளக்கவுரையாளர்கள் இதை, "பிரிந்து போனவள் இனியும் கணவனுக்குக் கட்டுப் பட்டவள் அல்ல, எனவே அவள் மறுமணம் செய்ய விடுதலை பெற்றிருக்கிறாள்" எனும் அர்த்தத்தில் எடுத்துக் கொண்டாலும், இது அவ்வளவு சுலபமானதல்ல. முதலாவதாக, இந்த வசனப்பகுதி "அவள் கட்டுப்பட்டவளல்ல" என்று பேசுகிறது. இரண்டாவதாக, ஆரம்பத்தில் அவர் இதை சரி என்று ஒப்புக் கொள்ளாவிட்டாலும், இப்பொழுது ஒப்புக் கொண்டிருக்கிறார் (ஒப்பீடுக 7:11). இங்கே குறிப்பிடப்படும் பொருள் என்னவெனில், விசுவாசமுள்ள துணை பிரயோஜனமற்ற உறவுமுறையைக் காப்பதற்குக் கட்டுப்பட்டவரல்ல என்பதுதான். காரணம்: தேவன் நம்மை சமாதானத்திற்கென்று அழைத்திருக்கிறார். மனுஷர்கள் தொடர்ச்சியான குழப்பத்தில் வாழ்வதை அவர் விரும்புவதில்லை; இராஜ்யத்துக்குள்ளோ, புறம்போ, அல்லது அதனிமித்தமாகவோ அப்படி வாழ அவர் விரும்புவதில்லை.[11]*

### *"நீங்கள் கிறிஸ்தவராயிருந்தால், அவிசுவாசமுள்ள உங்கள் துணையுடன் வாழ்ந்து, இந்த உதாரணங்களை [விளக்கங்களை] பிரதி பலியுங்கள்" (7:17-24)*

*யாருமே தனிமையாவதை விரும்பாத பவுல், ஒவ்வொருவரும்*

கிறிஸ்தவனாக அழைக்கப்பட்ட நிலமையிலேயே தரித்திருக்க வேண்டும் என்று சொன்னார். ஒருவர் அழைக்கப்பட்ட நிலையிலேயே தரித்திருப்பதற்கு அவர் இரண்டு உதாரணங்களை அவர் கொடுக்கிறார் (7:17-24). ஒரு யூதன் (அல்லது விருத்தசேதனம் பெற்றவன்), யூதனாகவே நிலைத்திருக்கட்டும், ஒரு புறஜாதி (விருத்தசேதனம் செய்யப்படாதவன்) யூதனாக மாற வேண்டுவதில்லை. ஒரு அடிமையானவனுக்குச் சொல்லும் போது, "அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்; நீங்கள் சுதந்திரவாளியாக விடுபட விரும்பினால், அப்படிச் செய்யுங்கள்" (7:21).[12] ஒவ்வொரு உதாரணத்துக்குப் பிறகும், கிறிஸ்தவன் தான் அழைக்கப் பட்ட நிலைமையிலேயே தரித்திருக்கக் கடவன் என்று பவுல் குறிப்பிட்டார் (7:21, 24).

## "மணமாகாதவர்களைக் குறித்து என்ன?" (7:25-38)

### "சூழ்நிலைக் கண்ணோட்டத்தில் தனிமையாய் இருப்பதே நலம்" (7:25-31)

பவுல் இன்னொரு கேள்விக்கு பதிலளிக்கத் துவங்குகிறார்: "தனிமையில் இருப்பவர்கள் விவாகம் பண்ண முயற்சிக்கலாமா?"

> அன்றியும் கன்னிகைகளைக் குறித்து, கர்த்தரால் எனக்கு கட்டளை இல்லை. ஆகிலும் நான் உண்மையுள்ளவனாயிருக்கிறதற்குக் கர்த்தரால் இரக்கம் பெற்று, என் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறேன். அதென்னவெனில், இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகம் பண்ணாமலிருப்பது மனுஷனுக்கு நலமாயிருக்கு மென்று எண்ணுகிறேன். நீ மனைவியோடே கட்டப் பட்டிருந்தால், அவிழ்க்கப்பட வகை தேடாதே; நீ மனைவி இல்லாதவனாயிருந்தால் மனைவியைத் தேடாதே. நீ விவாகம் பண்ணினாலும் பாவமல்ல; கன்னிகை விவாகம் பண்ணினாலும் பாவமல்ல. ஆகிலும் அப்படிப் பட்டவர்கள் சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள்; அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்றிருக்கிறேன். மேலும், சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், இனிவரும் காலம் குறுகினதான படியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவகளில்லாதவர்கள்போலவும், அழுகிறவர்கள் அழாதவர்கள் போலவும், சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போலவும் ... (7:25-31).

தனிமையிலிருப்பவர்களுக்கு அவர் சூழ்நிலை இருப்பதைப் பார்க்கும் போது தனிமையாகவே இருப்பது நல்லது என்று சொன்னார்; ஆனால் அவர்கள் விவாகம் பண்ணினாலும் பாவம் செய்வதில்லை என்பதைக்கூறி அவர்களைத் திடப்படுத்தினார். வசனம் 26, இது அவர்களுக்கு ஏன் முக்கியமானது என்பதைக் குறிப்பிடுகிறது; "நாம் கடினமான காலத்தினூடே போய்க் கொண்டிருக்கிறோம்" (CEV); அதாவது அவர்கள் இக்கட்டில் இருந்தார்கள் (NIV). பவுலின் அறிவுரை வரும் "உபத்திரவத்துக்கு அவர்கள் தப்ப வேண்டும்" என்பதே (7:28). பாடுகள் (KJV) "இந்த உபத்திரவங்கள்" இனி வரும் காலங்களில் கொடிதாயிருக்கும் என்பது, குழந்தைகளைப் பெற்றெடுப்பது, "வளர்ப்பது மற்ற குடும்பக்

*கடமைகள், பொறுப்புகள்,"*[13] *அடுத்த வசனத்தில் கண்டுள்ளபடி.*

***"சம்பந்தப் பட்டவைகளிலிருந்து விடுதலை" (7:32-38)***

*உபத்திரவ நேரங்களில் ஒரு கிறிஸ்தவன் தனித்திருந்தால் கஷ்டங்களும் பாடுகளும் அவனைக் குறித்து மட்டுமே சிந்திக்க வைக்கும். அவன் விவாகம் பண்ணி குடும்பத்தோடு இருந்தால், தன் முழுக்குடும்பத்துக்கும் அக்கரை காட்ட வேண்டியிருக்கும். தனிமையிலிருக்கும் போது தனக்காக மட்டுமே சிரமத்தை மேற் கொள்ளுவதைக் காட்டிலும் ஒருவன், தனக்கென ஒரு குடும்பமாகி அதன் வாழ்வாதாரம் முழுவதும் தன்னையே சார்ந்திருப்பதை அறிந்து ஒருகிறிஸ்தவன் கிறிஸ்துவுக்காக தைரியமாக எழுந்து நிற்பது, மற்றும் தன் உயிரையே அபாயத்திற்குள்ளாக்குவது போன்ற சிரமத்தை எடுத்துக் கொள்வது அவனுக்கு மிகவும் கடினமானதாக இருக்கும்.*

*இந்த உபதேசங்களெல்லாம் கிறிஸ்தவர்களின் "சுய பிரயோஜனத்துக்காகவே" (7:35அ). பவுல் அவர்களுக்கு "கடினமான நேரத்தைக் கொடுக்க வேண்டும்" என்பதற்காக முயற்சிக்கவில்லை. அவர்களுடைய வாழ்க்கையில் உபயோகமான ஒரு வழியைப் பரிந்துரையாக சொல்லுகிறார் (7:35ஆ).*

*அதிகாரம் முழுக்க, அதே கருத்து சொல்லப் படுவதை நாம் காண்கிறோம்: "கூடுமானால் விவாகம் பண்ணாதிருந்தால் நலமாயிருக்கும்."*

- *7:1 - "ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது" (அதாவது விவாகம் பண்ணாமலிருப்பது).*
- *7:7 - "எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன்" (பவுல் தனித்திருந்தார்). "... அவர்கள் என்னைப் போல இருந்து விட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும்."*
- *7:26, 27 - "... விவாகமில்லாதிருப்பது மனுஷனுக்கு நலமாயிருக்கு மென்று எண்ணுகிறேன் ... மனைவியைத் தேடாதே."*
- *7:32, 33 - "நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன் ... விவாகம் பண்ணாதவன் கர்த்தருக்குரியவைகளுக்காக கவலைப்படுகிறான். விவாகம் பண்ணினவன் ... உலகத்திற்குரியவைகளுக்காக கவலைப்படுகிறான்."*
- *7:38ஆ - விவாகம் பண்ணிக் "கொடாமலிருக்கிறவனும் அதிக நன்மை செய்கிறான்."*
- *7:40 - விதவையானவள் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக் கொள்ள விடுதலையாயிருக்கிறாள். "ஆகிலும் என்னுடைய அபிப்பிராயத்தின்படி, அவள் அப்படியே இருந்து விட்டால் பாக்கியவதியாயிருப்பாள்."*

*கிறிஸ்தவன் திருமணம் செய்யாமலிருப்பது தான் நலமென்று பவுல் எப்போதுமே எண்ணிக்கொண்டிருக்கவில்லை. விவாகத்தின் உயர்வை கிறிஸ்துவையும் சபையையும் ஒப்பிட்டு கணவன் மனைவி உறவை அவர் தெளிவாக்குவதிலிருந்தே சிறந்த மதிப்பைக் கொடுத்தார் என்று அறிவோம் (எபேசியர் 5:23-31). வேறு உண்மைகளும் பவுல் விவாக விஷயத்தை ஒப்புக் கொள்வதைக் காட்டுகின்றன.*[14]

*(1) கொரிந்தியர்களுக்கு அவர் குறிப்பிட்டிருப்பது விதி விலக்கான சூழ்நிலைகள் (7:26).* விவாகத்தை தாழ்ச்சியாகப் பார்ப்பதை விட, "இப்பொழுதிருக்கிற உபத்திரவத்தினிமித்தம்" கிறிஸ்தவன் விவாகமில்லாமல் தனிமையாய் இருப்பது நலமென்கிறார் பவுல். மற்ற நேரங்களிலே இதுவே உண்மையல்ல.

*(2) விவாகம் செய்வது பாவமல்ல.* பவுல் மீண்டும் மீண்டும் கிறிஸ்தவன் விவாகம் பண்ணினாலும் பாவமல்ல என்பதைப் பேசுகிறார்:

*7:9 -* "விரத்தராயிருக்கக் கூடாதிருந்தால் அவர்கள் விவாகம் பண்ணக் கடவர்கள்."

*7:28 -* "நீ விவாகம் பண்ணினாலும் பாவமல்ல."

*7:36 -* "அவன் தன் மனதின்படி செய்யக் கடவன்; அது பாவமல்ல, விவாகம் பண்ணட்டும்."

*7:38அ -* "அவளை (தனது கன்னிகையான புத்திரியை) விவாகம் பண்ணிக் கொடுக்கிறவனும் நன்மை செய்கிறான்."

*(3) "கூடுமானால் விவாகம் செய்யாமலிருங்கள்" என்று பவுல் குறிப்பிடுவது, தனது சொந்தக் கருத்தைச் சொல்லுகிறார், அது கர்த்தரிடமிருந்து வந்த வார்த்தையல்ல.* தனது சொந்தக் *கருத்தைச்* சொல்லுவதாக வலியுறுத்தி, கொரிந்தியர்கள் விவாகம் பண்ணாதிருப்பது நலம் என்று வலியுறுத்தினார். மேலும் அவர்கள் பரலோகத்துக்குப் போக என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் சிந்தியாமல், அவர்களின் வாழ்க்கையை சிறப்பாக்க தனது கருத்தை அவர்களுக்கு விளக்கப் படுத்தினார். பின் வசனங்கள் இந்த வலியுறுத்தல்களை ஆதாரமாக்கி காட்டுகின்றன:

*7:6, 7 -* "இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன், எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன்."

*7:25 -* "என் அபிப்பிராயத்தைத் தெரியப் படுத்துகிறேன்."

*7:32, 35 -* "நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன்"; "இதை நான் உங்களைக் கண்ணியில் அகப்படுத்த வேண்டுமென்று சொல்ல வில்லை."

*7:40 -* "என்னுடைய அபிப்பிராயத்தின்படி அவள் அப்படியே இருந்து விட்டால் பாக்கியவதியாய் இருப்பாள்."

இந்த சூழ்நிலைகளில் பவுலின் அறிவுரைகள் ஒரு முக்கியமான உண்மையை விளக்கப் படுத்துகிறது. சில விஷயங்கள், பாவம் என்கிற ரீதியில், தவறு இல்லாமல் இருக்கலாம்; சில காரியங்களைச் செய்ய வேண்டாமென மற்றவர்களுக்கு சொல்வதில் நல்ல காரணங்கள் இருக்கலாம் அல்லது செய்ய வேண்டாம் எனச் சொல்வதை மற்றவர்கள் பின்பற்றாத படி செய்யலாம்.

## "விதவைகளைப் பற்றி என்ன?" (7:39, 40)

அடுத்ததாக, பவுல் விதவைகள் மறுமணம் செய்யலாமா கூடாதா என்கிற நான்காவது கேள்விக்கு பதிலளிக்கிறார். அவர் முதலாவதாக விதி

*முறைகளைக் குறிப்பிடுகிறார்: "மனைவியானவள் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்'' (7:39அ; ரோமர் 7:2 யும் காண்க). விவாகம் வாழ் நாள் காலத்துக்குரியது! "தன் புருஷன் மரித்த பின் தனக்கு இஷ்டமான எவனையாகிலும் விவாகம் பண்ணிக் கொள்ள விடுதலையாயிருக்கிறாள்" (7:39 ஆ). திருமணக் கட்டுக்களை மரணம் முறிக்கிறது. விதவைப் பெண்களும் மனைவியை இழந்த ஆண்களும் மறுமணம் செய்ய விடுதலைப் பெற்றிருக்கிறார்கள். இருப்பினும், தகுதிப்படுத்தும் இந்த வார்த்தைகளையும் பவுல் சேர்த்துக் கொள்கிறார்: "கர்த்தருக்குள்ளானவர்களை" (7:39இ). கிறிஸ்தவ விதவையோ மனைவியை இழந்தவரோ "கர்த்தருக் குள்ளானவர்களை'' விவாகம் செய்ய வேண்டும் - அதாவது அவளோ அவனோ கிறிஸ்தவரை மட்டுமே விவாகம் பண்ண வேண்டும். புதிய இண்டர் நேஷனல் மொழிபெயர்ப்பாளர்கள், "அவள் தனக்கு இஷ்டமான யாரை வேண்டுமானாலும் விவாகம் பண்ண விடுதலை பெற்றிருக்கிறாள், ஆகிலும் அவன் கர்த்தருக்குரியவனாயிருக்க வேண்டும்" என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்.*

*இருந்தபோதிலும், இப்போதிருக்கிற உபத்திரவத்தின் காலத்தினால், கிறிஸ்தவ விதவை தனிமையில் இருந்து கொள்வது அவளுக்கு நல்லது; பவுலுடைய அபிப்பிராயத்தில், அவள் தனித்து இருப்பது அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் (7:40). அவர் தன்னுடைய அபிப்பிராயத்தை வலியுறுத்தி, "என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்" என்றார். "என்னிடத்திலும் ... ஆவி உண்டென்று . . . எண்ணுகிறேன்" எனும் வார்த்தைகளை சொல்ல நயத்திற்காக பவுல் பயன்படுத்தியிருக்கலாம். ஆவியானவர் அவரிடத்தில் இருப்பதை அவர் நன்றாகவே அறிந்திருந்தார். ஆகிலும், தனக்குள்ள உறவு முறையை இன்னும் சற்று கூடுதல் தன்னடக்கத்துடன் மற்றவர்கள் அவரது செய்தியை இன்னும் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அப்படிச் சொன்னார். அவரது வாசகர்கள் தமது அபிப்பிராயத்தை ஒரு சட்டமாக ஏற்றுக்கொள்ள அவர் விரும்பவில்லை; மாறாக தனது ஆலோசனைகளை வினயமாக அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார்.*

## முடிவுரை: இன்றைய சபைக்குத் தேவையான செய்தி

*இந்த செய்திகளின் உபதேசங்களை இன்றைய உலகத்தில் நாம் எப்படி பயன்படுத்த இயலும்?*

*பவுல் சொன்னவைகளில் பெரும்பாலான செய்தி நேரடியாக நமக்குப் பொருந்தக் கூடியவைகளாயுள்ளன. அன்று போலவே இன்றும், வேசித்தனம் இல்லாதபடிக்கு நாம் விவாகம் பண்ணவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் . . . தேவனுடைய விவாகச் சம்பந்தப்பட்ட திட்டப்படி, ஒருவருக்கொருவர் பாலுறவில் திருப்திபடுத்த வேண்டும் . . . விவாகத்தின் கட்டு வாழ்நாள் முழுவதும் இருக்கவேண்டும் என்பது தேவனுடைய எண்ணம் . . . கிறிஸ்தவனின் வாழ்க்கைத் துணை அவிசுவாசியாயிருக்கிறார் என்பதற்காக தள்ளி விடுதலை தேவன் அனுமதிப்பது இல்லை . . . ஒரு கிறிஸ்தவன் விவாகக் கட்டுக்களால் வாழ்நாள் முழுவதும் கட்டப்பட்டவன், ஆகிலும் தனது துணையின் மரணத்துக்குப் பிறகு மறுமணம் செய்ய விடுதலையாயிருக்கிறார் - "கர்த்தருக்குள்ளானவர்களை மட்டும்'' . . . இறுதியாக, சில சூழ்நிலைகள்*

*கிறிஸ்தவன் விவாகம் பண்ணாமல் தனிமையாயிருப்பதை நலமாக்குகின்றன. வெளிப்புற சூழ்நிலைகள் எவ்விதத்திலும் கிறிஸ்தவன் விவாகம் செய்வதை தவறாக்காது.*

*இன்னும் விரிவான பயன்பாட்டையும் நாம் காணலாம். இன்று அநேக குடும்பங்களில் பிரச்சனைகள் இருக்கிறபடியால், விவாகத்தைக் குறித்தும், குடும்பத்தைக் குறித்தும் நாம் போதிக்க வேண்டிய அவசியத்தை இந்த அதிகாரம் ஆலோசனையாகச் சொல்லுகிறது. விவாகரத்து என்பது இன்று சபையிலும் கூட அன்றாட பொது நிகழ்ச்சியாக இருக்கிறது. பிரிவு ஏற்படாத குடும்பங்களைக் காக்க நமக்கிருக்கும் ஒரே நம்பிக்கை குடும்பம் எனும் தலைப்பில் நாம் போதிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதோடு கூட, விவாகத்தைக் குறித்தும், விவாகரத்தைக் குறித்தும், உலகத்தில் இன்று அநேகம் பேர் தங்கள் குடும்பங்களில் பிரச்சனைகளை அனுபவிக்கிறார்கள், அவர்கள் சபையின் மீது பற்று வைக்கத்தக்கதாக, சபை அவர்களது பிரச்சனைகளை தீர்க்க உதவுவதால், குடும்பத்தைக் குறித்தும் நாம் போதிக்க வேண்டும்.*

---

*குறிப்புகள்*

*[1]கொரிந்தியர்கள் எழுதின கேள்விகளுக்குப் பதில் கொடுக்கும் படியாக, "எழுதின காரியங்களைக் குறித்து" என்று ஆரம்பிக்கிறார் (7:1; 7:25; 8:1; 12:1). 16:1-லும் இதைப் பயன்படுத்துகிறார், இதினால் அவர்கள் காணிக்கையைக் குறித்து கேட்டிருக்கிறார்கள் என்று ஆலோசிக்க வைக்கிறது. [2]இப்போது உண்டாயிருக்கிற துன்பம் என்னவென்று நமக்குத் தெரியாது (7:26). அந்தப் பகுதியில் மிகவும் கொடிய உபத்திரவம் சபைக்கு வரவிருந்ததாக சிலர் நம்புகிறார்கள். [3]"ஸ்திரீயைத் தொடாமலிருப்பது" என்பது நேரடி மொழிபெயர்ப்பு. புதிய இண்டர் நேஷனல் மொழிபெயர்ப்பில் இந்தக் கருத்து எடுத்துக் கொள்ளப்பட்ட விதமானது: "மனிதன் விவாகம் செய்யாமலிருப்பது அவனுக்கு நல்லது." "விபச்சார வேசித்தனங்களைச் செய்யாமலிருப்பது நல்லது" என்ற கருத்தோடு பவுல் விட்டிருப்பாரானால், அதைத் தடுத்திருக்க மாட்டார்; ஏனெனில் ஏற்கனவே வலிமையான வார்த்தைகளால்: "வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்" என்று சொல்லியிருந்தார் (6:18). [4]சிலர் நம்பிக் கொண்டிருக்கிறபடி விவாகம் பண்ணி பாலுறவு கொண்டு பிள்ளைகளை பெற்றெடுப்பது மட்டுமே விவாகத்தின் நோக்கம் என்பது உண்மையல்ல. [5]"ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்" (7:5), என்று பவுல் சொன்னார். அநேகமாக சிலர் தங்களுடைய துணைவருடன் பாலுறவு கொள்வதை தவிர்த்துக் கொண்டு வந்திருக்கலாம். இது அநேகமாக அஞ்ஞான ஆசாரங்களான பரிசுத்த விரத காலம் போன்ற சமய மரபுக்களின் பழக்கமாக இருந்திருக்கலாம்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 159.) *[6]"உணர்ச்சியுடன்" என்பது வலபக்கச் சாய்மான அச்செழுத்துக்களால் குறிப்பிடுகிறது. மூலப் பாஷையில் "வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்" எனும் எளிய வார்த்தைகளில் கூறப் படுகிறது. எப்படியாயினும் அநேக விளக்கவுரையாளர்களும், மொழிபெயர்ப்பாளர்களும் "உணர்ச்சி மிகுதியால் வேகிறதாக" ஒப்புக் கொள்கிறார்கள். [7]பவுல் தனது உபதேசம் "கர்த்தரிடத்திலிருந்து வந்ததாகக் குறிப்பிடும் போது, இயேசு பேசிய உண்மையான வார்த்தைகளைப் பேசியிருக்கலாம்." இந்த பூமியிலே இயேசு இருந்த போது, விவாகத்தைக் குறித்தும் விவாகரத்தைக் குறித்தும் தெளிவான உபதேசத்தைக் கொடுத்தார். பவுல் தனது உபதேசம்*

*தன்னிடமிருந்து வந்ததாகக் குறிப்பிடும் போது, அல்லது தனது கருத்துக்கள் தன்னுடையது எனக் கூறும்போது அவரது வாசகர்கள் தங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்ள அறிவுறுத்தினார் அல்லது ஆலோசனை கொடுத்தார். தனது அபிப்பிராயத்தை தேவனுடைய கட்டளைக்கு ஒப்பாகச் (சமமாகக்) கூறவில்லை. [8]இது பவுலின் கட்டளை, கர்த்தர் தமது போதனையில் கலப்படத் திருமணங்களைப் போதிக்க வில்லை (மத்தேயு 5 மற்றும் 19). [9]கொரிந்து கிறிஸ்தவர்களில் சிலர் ஒரு வேளை ஒரு கிறிஸ்தவன் அஞ்ஞான மதத்தைச் சேர்ந்த ஒருவரை விவாகம் பண்ணினால், அந்த நபருடைய அஞ்ஞான மதம் விவாகத்தைக் களங்கப்படுத்தி பரிசுத்தக் குலச்சலை ஏற்படுத்தக் கூடும் என்று நினைத்தனர். ஒரு அஞ்ஞானியாலும் அவரது மதத்தாலும் கெடுக்கப்படுவதைக் காட்டிலும், ஒரு கிறிஸ்தவனின் துணையால் ஒரு விவாகம் பரிசுத்தமாக்கப்படுகிறது என்று பவுல் உறுதிப்படுத்தினார். [10]அவிசுவாசமுள்ள தனது வாழ்க்கைத் துணை பிரிந்து போன பிறகு - அவர் மறுமணம் செய்ய உரிமை பெற்றவரா? இந்த கேள்விக்கு இருபுறமும் விவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. எப்படியிருப்பினும் கிறிஸ்து விவாகரத்துக்கும் மறுமணம் செய்வதற்கும் ஒரே ஒரு காரணத்தை மட்டுமே முன் வைக்கிறார்: விபச்சாரம். இந்த வசனத்தில் விபச்சாரம் குறித்து தான் பேசுகிறது என்று நன்கு யூகிக்க முடியும். ஒரு கிறிஸ்தவரின் துணையாகிய அவனோ அவளோ விபச்சாரத்தையன்றி வேறே காரணத்துக்காக பிரிந்து போய் மறுமணம் செய்து கொள்வார்களானால், அவனோ அல்லது அவளோ விபச்சாரம் செய்கிறவர்கள் ஆகிறார்கள். இதனால் அந்தக் கிறிஸ்தவர் மறுமணம் செய்து கொள்வதற்கு விடப்படுகிறார்.* David Lipscomb, *A Commentary on the New Testament Epistles,* vol. 2, *First Corinthians*, ed. J. W. Shepherd (Nashville: Gospel Advocate Co., 1935; reprint, 1960), 102*ல் உயர்த்திபிடிக்கப்பட்டிருக்கிறது.*

[11]Carl Holladay, *The First Letter of Paul to the Corinthians,* The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979; reprint, Abilene, Tex.: A.C.U. Press, 1984), 96. *[12]அடிமைத்தனம் குறித்த பவுலின் கருத்து ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாயுள்ளது. அடிமைகள் எப்பொழுதும் அடிமைகளாகத்தான் இருக்க வேண்டும், அதிகாரத்தை எதிர்த்துப் போராடக் கூடாது. அதைக் குறித்து அவர்கள் "கவலைப் படவும் கூடாது": அவர்கள் அடிமைகளானதால், மனந்தளர்ந்து போகவோ அல்லது கிளர்ச்சி பண்ணக் கூடியவர்களாகவோ மாறிவிடக் கூடாது. கிறிஸ்துவுக்குள்ளாக அவர்கள் விடுதலை பெற்றிருக்கிறார்கள், கிறிஸ்துவுக்குள் விடுதலையாக்கப் பட்டவர்கள் அடிமைகளாயிருக்கிறார்கள் (7:22). எப்படியிருப்பினும், பவுல் விருத்தசேதனமோ விருத்தசேதனமில்லாமையோ "ஒன்றுமில்லை" என்று சொல்லுவது போல் (7:19), அடிமைத்தனத்தைக் குறித்து சொல்லுவதில்லை. அடிமைத்தனம் என்பது "ஏதோ ஒன்று" - இயன்ற வரை தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று (7:23); மனுஷன் சுயாதீனனாய் இருப்பது நலம் (7:21). எனவே அடிமையாயிருப்பது தீமையானது என்பது போல் கருதினார்.* [13]Raymond C. Kelcy, *First Corinthians,* The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1967), 34. *[14]1 தீமோத்தேயு 4:1-3யும் காண்க. சத்தியத்தை விட்டு விலகும் காலத்தில் மனிதர்கள் "விவாகம் பண்ணாமலிருக்கும்படி" கட்டளையிடுவார்கள் என்று பவுல் சொன்னார். எபிரேயர் 13:4ல் அதை எழுதினார் விவாகம் கனப்படுத்தப்பட வேண்டியது என்று சொன்னார்.*